இராயபுரம், பெரம்பூர், ஆர்.கே.நகர் சட்டமன்றத் தொகுதிகளுக்கு உட்பட்ட தண்டையார்பேட்டை மின்வாரிய அலுவலகம் மற்றும் அதன் பகுதிகளில் அமைந்துள்ள மின்மாற்றி உள்ளிட்டவற்றை போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் நேரில் ஆய்வு மேற்கொண்டார். இந்த கள ஆய்வில் சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ., ஐட்ரீம் ஆர்.மூர்த்தி எம்.எல்.ஏ., ஜே.ஜே.எபிநேசர் எம்.எல்.ஏ., மின் துறை அதிகாரிகள், பகுதிச் செயலாளர்கள், வட்டச் செயலாளர்கள், உடன் இருந்தனர்.

திருவள்ளூர் மாவட்டம் திருநின்றவூர் நகராட்சி 16, 17, ஆகிய வார்டியில் உங்களுடன் ஸ்டாலின் முகாம் நடைபெற்றது இதில் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்துகொண்டு முகாமை தொடங்கி வைத்து பயனாளிகளுக்கு பல்வேறு சான்றிதழ்கள் நலத்திட்ட உதவிகள் வழங்கினார். உடன் நகராட்சி தலைவர் உஷா ராணிரவி, நகர் செயலாளர் தி.வை.இரவி, ஆணையர் ஜீவிதா, பொறியாளர் எம்.குமார், நிர்வாகிகள் சி.ஜெரால்டு, அன்பழகன், எஸ்.கமலக்கண்ணன், எஸ்.நாகராஜ், பி.எல்.ஆர்.யோகா, பாபு, குணசேகரன், மைதிலி கோகுல், ஸ்ரீதேவி, மேகநாதன், பிரகாஷ், உள்பட பலர் உள்ளனர்

பருவமழை தொடங்கியதிலிருந்து

16,248 சிறப்பு மருத்துவ முகாம்கள் - 6,78,034 பேர் பயன்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

சென்னை, நவ. 1- மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் நேற்று (31.10.2025) சென்னை தேனாம்பேட்டை டிஎம்எஸ் வளாகத்தில் உள்ள பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் அலுவலக கூட்டரங்களில், வடகிழக்கு பருவமழை சுகாதார நடவடிக்கைகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. பிறகு அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்தாவது:

வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை கூட்டம்

வடகிழக்கு பருவமழை சுகாதார நடவடிக்கைகள் குறித்து ஆய்வுக்கூட்டம் இன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ்நாடு முழுவதிலும் உள்ள இணை இயக்குநர்கள், கல்லூரி முதல்வர்கள், மாவட்ட சுகாதார அலுவலர்கள் என்று உயரலுவலர்கள் காணொளி வாயிலாக கலந்து கொண்டனர். ஒவ்வொரு வடகிழக்கு பருவமழைக்கு முன்பாக மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் என்னென்ன முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று தொடர்ச்சியாக கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது. அந்தவகையில் கடந்த 07.10.2025 அன்று சென்னை ஓமந்தூரார் தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை கூட்டரங்கில் மக்கள் நல்வாழ்வுத்துறை, நகராட்சி நிர்வாகத்துறை, ஊரக வளர்ச்சித்துறை, பள்ளிக்கல்வித்துறை போன்ற பல்வேறு சேவை துறைகளில் 700க்கும் மேற்பட்ட உயரலுவலர்கள் கலந்து கொண்ட கூட்டம் நடத்தப்பட்டது. அக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறிப்புகளாக உயரலுவலர்களுக்கு அந்தந்த மாவட்டங்களில் நிறைவேற்றிட ஏதுவாக கொடுக்கப்பட்டது. அந்தவகையில் தமிழ்நாடு முழுவதும் இதற்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. வடகிழக்கு பருவமழை கடந்த 16.10.2025 அன்று தொடங்கியது. வடகிழக்கு பருவமழையினை பொறுத்தவரை நமக்கு வருகின்ற மழையின் சராசரி அளவு 86.7 செ.மீ ஆகும். இது வரை 24.9 செ.மீ அளவிற்கு மழை பெய்திருக்கிறது. இன்னமும் 62 செ.மீ அளவிற்கு மழை பெய்ய வேண்டும். இந்நிலையில்தான் மக்கள் நல்வாழ்வுத்துறை பருவமழையின் போது ஏற்படுகின்ற நோய் பாதிப்புகள் குறித்து விளக்கமாக கலந்தாலோசிக்கப்பட்டது. மேலும் வடகிழக்கு பருவமழை தொடங்கியதிலிருந்து 16,248 மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் தமிழ்நாட்டில் நடத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் 6,78,034 பேர் பயனடைந்துள்ளனர். இந்த 15 நாட்களில் காய்ச்சல் பாதிப்புகள் என்று கண்டறியப்பட்டவர்கள் 5,829 பேர், இருமல் சளி பாதிப்புகள் கண்டறியப்பட்டவர்கள் 51,107 பேர், வயிற்றுப் போக்கினால் பாதிக்கப்பட்டவர்கள் 863 பேர், இவர்கள் அனைவருக்குமே இம்முகாம்களின் வாயிலாக மருந்து மாத்திரைகள் மற்றும் சிகிச்சைகள் வழங்கப்பட்டு நலமுடன் இருக்கிறார்கள்.

அந்தவகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, பருவமழையின்போது ஏதாவது ஒரு தெருவில் அல்லது ஒரு ஊரில் 2க்கும் மேற்பட்ட காய்ச்சல் பாதிப்புகள் இருக்குமேயானால் உடனடியாக அங்கு மருத்துவ முகாம்கள் நடத்திட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது. இதன் மூலம் 16,248 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டுள்ளது. இந்த அரசு பொறுப்பேற்றதற்கு பிறகு ஒவ்வொரு ஆண்டும் மருத்துவ முகாம்கள் 10,000 தொடங்கி 26,000 மருத்துவ முகாம்கள் வரை இரண்டு ஆண்டுகளில் மிக் ஜாம் புயல் பாதிப்பு, பெஞ்சன் புயல் பாதிப்புகள் என்று இருந்த போது கூடுதலாக மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டுள்ளது.

அந்தவகையில் தமிழ்நாடு முழுவதும் காய்ச்சல் பாதிப்புகள் தடுப்பு நடவடிக்கைகளுக்காக 40,000 களப்பணியாளர்கள் நாள்தோறும் ஈடுபட்டு வருகிறார்கள். அதேபோல் ஊராட்சி மற்றும் நகராட்சி அமைப்புகளில் கொசு ஒழிப்பு பணிகளில் 25,000க்கும் மேற்பட்ட களப்பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டு அவர்களும் மிகச் சிறப்பாக பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இந்தநிலையில் டெங்கு, மலேரியா, சிக்கன்குனியா, வயிற்றுப் போக்கு, மஞ்சள் காமாலை, காலரா, டைபாய்டு, எலிக்காய்ச்சல், உன்னிக்காய்ச்சல், புளுக்காய்ச்சல் போன்ற மழைக்காலங்களில் ஏற்படுகின்ற நோய் பாதிப்புகள் குறித்து மிகத் தீவிரமாக தொடர்ந்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு வருகிறது.

டெங்கு பாதிப்புகள்

டெங்கு பாதிப்புகள் பொறுத்தவரை தமிழ்நாட்டில் கடந்த 4.5 ஆண்டுகளில் மிக கட்டுக்குள் இருக்கின்றது. இந்த அரசு பொறுப்பேற்பதற்கு முன்பு டெங்கு பாதிப்புகள் அரசு மருத்துவமனைகளில் பாதிக்கப்பட்டு சிகிச்சையில் சேர்க்கப்பட்டவர்கள் பட்டியல் மட்டுமே செய்திகளாக்கப்பட்டு வந்தது. ஆனால் தற்போது தனியார் மருத்துவமனைகளில் பாதிக்கப்பட்டு சிகிச்சையில் உள்ளவர்கள் பட்டியலும் தற்போது மதிப்பீடு செய்யப்பட்டு வருகிறது. அந்தவகையில் தமிழ்நாட்டில் இது வரை டெங்கு காய்ச்சல் மூலம் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 18,725 பேர், உயிரிழப்புகள் 9 பேர், நான் தொடர்ச்சியாக சொல்லி வருகிறேன். உயிரிழப்புகள் இல்லாத வகையில் இத்துறை பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது, என்றாலும் காய்ச்சல் பாதிப்புகள் என்று சொன்னவுடன் உடனடியாக மருத்துவரை அணுகுவது நல்லது. அதேபோல் இணை நோய் பாதிப்புகள் உள்ளவர்கள் மிக எச்சரிக்கையாக இருப்பது நல்லது. குழந்தைகள், வயது மூத்தவர்கள், கர்ப்பிணி தாய்மார்கள் மருத்துவர்கள் ஆலோசனைகள் இல்லாமல் மருந்து மாத்திரைகள் உட்கொள்ளாமல் இருப்பது நல்லது. இப்படி காய்ச்சல் பாதிப்புகள் வந்தவுடன் மருத்துவரை அணுகாமல் இருந்தால் உயிரிழப்புகள் ஏற்படும். எனவே பாதிப்பு ஏற்பட்டவுடன் மருத்துவரை சந்திப்பது நல்லது. இந்த 9 உயிரிழப்புகளும் எதனால் ஏற்பட்டது என்பதற்கு தனித் தனி காரணங்கள் இருக்கின்றது. டெங்கு பாதிப்புகளால் உயிரிழப்புகள் அதிகம் ஏற்பட்டது இரண்டு ஆண்டுகள் தான். ஒன்று 2012இல் 66 பேர் டெங்கு பாதிப்புகளினால் உயிரிழந்தனர். இன்னொன்று 2017இல் 65 பேர் உயிரிழந்திருக்கிறார்கள். இந்த அரசு பொறுப்பேற்றதற்கு பிறகு அதனை கட்டுப்படுத்தி இறப்புகள் என்பது ஒற்றை இலக்கத்தில் இருந்து கொண்டு அதனையும் குறைப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. அந்தமாதிரியான நடவடிக்கைகளுக்காக தான் இக்கூட்டம் நடைபெற்று வருகிறது. டெங்கு பொறுத்தவரை தனியார் மற்றும் அரசு மருத்துவமனைகளில் ஆய்வு செய்தவற்கு 4,755 ஆய்வகங்கள் இருக்கின்றது. இந்தியாவில் ஒரு மாநிலத்தில் டெங்கு பாதிப்புகள் குறித்து கண்டறிய ஆய்வகங்கள் இந்த அளவிற்கு இருப்பது தமிழ்நாட்டில்தான். இந்தாண்டு மட்டுமே பரிசோதனைகளுக்கு எடுக்கப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை 2,52,738. இதன்மூலம் இந்தாண்டு டெங்கு கட்டுக்குள் வைக்கப்பட்டுள்ளது. இத்துறையின் மூலம் டெங்கு சிகிச்சைகளுக்கு 24,240 பேர் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். எனவே இத்துறை மிகவும் கவனமாக நோய் பாதிப்புகளிலிருந்து மக்களை காப்பதற்கு தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது என்பதை பத்திரிக்கை மற்றும் ஊடகவியலாளர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டு வருகிறது. தேவையற்ற முறையில் பதட்டங்களை ஏற்படுத்த வேண்டாம் என்பதை அன்புகூர்ந்து கேட்டுக் கொள்கிறோம். உண்மையான பாதிப்புகள் இருக்குமேயானால் அதற்குரிய தீர்வுகள் எடுப்பதற்கு இந்த அரசு தொடர்ந்து தயாராக இருக்கிறது. மழைக்கால நோய் பாதிப்புகள் என்பது கணிசமாக குறைந்து வருகிறது.

நோய் பாதிப்பு ஒப்பீடு

கடந்த ஆண்டு மலேரியா பாதிப்பு 284, இந்தாண்டு 218 ஆக குறைந்திருக்கிறது. கடந்த ஆண்டு சிக்கன் குனியா நோய் பாதிப்பு 550, இந்த ஆண்டு 429 ஆக குறைந்திருக்கிறது. கடந்த ஆண்டு வயிற்றுப் போக்கு பாதிப்பு 86,026 இந்த ஆண்டு 64,519 ஆக குறைந்திருக்கிறது. மஞ்சள் காமாலை கடந்த ஆண்டு பாதிப்பு 3,210 இந்த ஆண்டு 2,532. காலரா பாதிப்பு கடந்த ஆண்டு 53, இந்தாண்டு 52, டைபாய்டு பாதிப்பு கடந்த ஆண்டு 20,525 இந்த ஆண்டு 14,346 எலிக்காய்ச்சல் பாதிப்பு கடந்த ஆண்டு 3,104 இந்தாண்டு 2,134 ஆக குறைந்திருக்கிறது. இன்னமும் கூட இவற்றையெல்லாம் மிக குறைந்த எண்ணிக்கையில் பாதிப்புகளை உருவாக்குவதற்கு சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அவர்களும் பொது மக்களுக்கு குறிப்பாக எலிக்காய்ச்சல் ஏற்படுவதற்குரிய காரணங்களை பொது சுகாதாரத் துறை வெளியிட்டுள்ளது. குறிப்பாக மழைக்காலங்களில் வெறும் கால்களில் மழைநீரில் நடக்க வேண்டாம் என்றெல்லாம் அறிவுறுத்தி வருகிறது. பொது சுகாதாரத்துறை யில் 8,713 துணை சுகாதார நிலையங்கள் இருக்கின்றது. ஆரம்ப சுகாதார நிலையங்கள் 2,336 இருக்கின்றது. அனைத்து மருத்துவமனைகளிலும் இதற்காக துண்டு பிரசுரங்கள், சுவரொட்டிகள் எல்லாம் அந்தந்த பகுதிகளில் உள்ள மருத்துவமனைகளின் சுவரில் ஒட்டப்பட்டுள்ளது. இப்படி பல்வேறு விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்பட்டு இருந்தாலும் பொதுமக்கள் கூடுதல் விழிப்புணர்வோடு இருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

பாம்புக்கடி – நாய்க்கடி தொடர்பான கேள்விக்கு

இந்த அரசு பொறுப்பேற்பதற்கு முன்பு வரை பாம்புக்கடி, நாய்க்கடிகளுக்கான மருந்துகள் என்பது வட்டார அரசு மருத்துவமனைகள், தலைமை மருத்துவனைகள், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் மட்டுமே இருந்தது. இந்த அரசு பொறுப்பேற்றதற்கு பிறகு குறிப்பாக முதலமைச்சர் பாம்புக்கடி, நாய்க்கடி போன்றவை கிராமப்புறங்களில் உள்ள மக்களை தான் அதிகம் பாதிக்கிறது என்று சொன்னதன் விளைவு பிரத்யேகமாக ஒரு திட்டம் தீட்டப்பட்டு பாம்புக்கடிக்கான ASV என்று சொல்லக்கூடிய மருந்தும், நாய்க்கடிக்கான ARV என்று சொல்லக்கூடிய மருந்தும் தமிழ்நாட்டில் இருக்கின்ற 2336 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் இருப்பு வைக்கப்பட்டிருக்கிறது. நானும் ஒவ்வொரு மருத்துவமனைகளிலும் ஆய்வு செல்லும்போது பாம்புக்கடி, நாய்க்கடிக்கான மருந்துகள் இருப்பு குறித்து ஆய்வுகள் தொடர்ந்து செய்து வருகிறேன். தமிழ்நாட்டில் போதுமான அளவிற்கு மருந்து கையிருப்பில் இருக்கிறது.

பாம்புக்கடி இறப்பு தொடர்பான கேள்விக்கு

அந்த மருத்துவமனையில் இரண்டு மருத்துவர்கள். ஒரு மருத்துவர் கிராமத்தில் சென்று மருத்துவ சேவை ஆற்றுவதற்கு சென்றிருக்கிறார் என்று சொல்கிறார்கள். மருத்துவர் அந்த நேரத்தில் இல்லாத நிலையில் உடனடியாக தகவல் தெரிந்து சம்பந்தப்பட்ட மருத்துவரை தற்காலிக பணியிட நீக்கம் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் அப்பகுதியில் இருப்பவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால் அம்மருத்துவர் பணிக்கு வந்து விட்டார். அருகில் ஒரு கிராமத்திற்கு மருத்துவ சிகிச்சை அளிக்க சென்று இருக்கிறார் என்று சொல்கிறார்கள். அந்த நேரத்தில் செவிலியர் பணியில் இருந்திருக்கிறார்கள். அம்மருத்துவமனையில் ASV மருந்து இருந்திருக்கிறது. இம்மருந்து எப்படி பயன்படுத்த வேண்டும் என்பது குறித்து பொது சுகாதாரத்துறையினர் பலமுறை வகுப்புகள் நடத்தி இருக்கிறார்கள். இதற்கு முன்பு அம்மருத்துவமனையில் மருந்தே கிடையாது. ஆனால் தற்போது இம்மருத்து கையிருப்பில் இருக்கின்றது. இந்த மருந்து பயன்படுத்த தவறிய அந்த செவிலியர் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இது மற்ற மருத்துவமனைகளில் பணியாற்றும் பணியாளர்களுக்கு ஒரு பாடமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன் என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு.அருண்தம்புராஜ், தமிழ்நாடு சுகாதார திட்ட இயக்குநர் மரு.வினீத், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.சோமசுந்தரம், மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.சுகந்தி இராஜகுமாரி, மருத்துவம் மற்றும் ஊரகநலப் பணிகள் இயக்குநர் மரு.சித்ரா, கூடுதல் இயக்குநர் மரு.சம்பத், இணை இயக்குநர் மரு.செந்தில் மற்றும் அனைத்து மாவட்ட இணை இயக்குநர்கள், அரசு மருத்துவக்கல்லூரி முதல்வர்கள், மாவட்ட சுகாதார அலுவலர்கள், உயரலுவலர்கள் ஆகியோர் காணொளி மூலமாக கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லி நகராட்சி 18 வது வார்டு திருமழிசை பேரூராட்சி 2 வது வார்டியில் சிறப்புக் கூட்டம் நகர மன்ற தலைவர் காஞ்சனா சுதாகர், பேரூராட்சி தலைவர் ஜெ.மகாதேவன் தலைமையில் நடைபெற்றது. இதில் பூவிருந்தவல்லி சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி கலந்து கொண்டு பொதுமக்களின் கோரிக்கையை கேட்டுறிந்து பல்வேறு வளர்ச்சி பணிகள் குறித்து சிறப்புரையாற்றினார் உடன் பூவிருந்தவல்லி நகர செயலாளர் ஜி.ஆர்.திருமலை, திருமழிசை பேரூர் கழக செயலாளர் தி.வே.முனுசாமி, பேரூராட்சி துணை தலைவர் அனிதா சங்கர், உள்பட அரசு அதிகாரிகள் திமுக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்

அம்பத்தூர் 87–வது வார்டு மாமன்ற உறுப்பினர் அலுவலகத்தில், மழைக்கால முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்த பகுதி சபை கூட்டம் அனைத்து துறை சார்ந்த அதிகாரிகள் முன்னிலையில் மாமன்ற உறுப்பினர் டாக்டர் ஏ.பி.பூர்ணிமா தலைமையில் நடைபெற்றது. இதில் பி.ஜனார்த்தனன், ஆர்.முனியன், எம்.பாஸ்கர், ஏ.அருள்ராஜ், எஸ்.பி.ராஜா, என்.ராஜ்மோகன், டி.சுரேஷ்பாபு, எம்.ராஜேஸ்வரராவ் பாஸ்கர், எம்.ராஜா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரையாற்றுகிறார்!

குன்றத்தூர் தெற்கு ஒன்றிய தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் வேண்டுகோள்!

காஞ்சிபுரம், நவ. 1

குன்றத்தூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:

குன்றத்தூர் தெற்கு ஒன்றிய தி.மு.க செயற்குழு கூட்டம் 01.11.2025 சனிக்கிழமை இன்று மாலை 04.00 மணியளவில் படப்பை சி.என்.சி. மஹாலில் எனது (ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன்) தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் குறுசிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் சிறப்புரையாற்றுகிறார்.

திருப்பெரும்புதூர் சட்டமன்ற தொகுதி மேற்பார்வையாளர் மீஞ்சூர் கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், ஒன்றிய குழுத்தலைவர் திருமதி. சரஸ்வதி மனோகரன், மத்திய ஒன்றியப் பொறுப்பாளர் திருமுடிவாக்கம் ஏ.மணி, வடக்கு ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம், ஒன்றியக் குழு துணைத் தலைவர் திருமதி உமா மகேஸ்வரி வந்தேமாதரம், ஒன்றியக் கழக பொறுப்புக்குழு உறுப்பினர்கள் வ.நந்தகோபால், சி.பார்த்தசா ரதி, மூ.ராஜேந்திரன், எஸ்.கர்ணன், குமுதா, சுமன், டி.லோகநாதன், த.ஏழுமலை, என்.வாசு ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஒன்றிய அணிகளின் நிர்வாகிகள், கிளைக் கழக செயலாளர்கள், பாகநிலை முகவர்கள் (BLA2), பாக டிஜிட்டல் முகவர்கள் (BDA), உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் உள்ளிட்ட அனைவரும் தவறாமல் கலந்துகொண்டு சிறப்பிக்கு ம்படி கேட்டு க்கொள்கிறேன்.

பொருள்: என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பாக வாரியாக பரப்புரைக் கூட்டம், SIR வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல், நவம்பர்27 துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் பிறந்த நாள் விழா,2026 தேர்தல்.

குறிப்பு: மாவட்டக் கழகத்தால் வழங்கப்பட்ட வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் கணக்கெடுக்கும்

புத்தகத்தினை பாகநிலை முகவர் (BLA2) கூட்டத்திற்கு வரும் போது அவசியம் கொண்டு வர வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

சென்னை மாநகராட்சி மண்டலம் – 11

153வது வார்டு ஏரியா சபை சிறப்புக் கூட்டம்!

சாந்தி ராமலிங்கம் எம்.சி. தலைமையில்!

சென்னை, நவ. 1-

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் -11 153வது வார்டு சிறப்பு கூட்டம் 29.10.2025 அன்று மாமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் திருமதி சாந்தி ராமலிங்கம் எம்.சி. தலைமையில் நடைபெற்றது.

153வது வார்டு முழுவதும் முடிக்கப்பட்ட திட்டங்கள், நடைபெற்றுக்கொண்டிருக்கும் பல்வேறு திட்டப் பணிகளுக்கு உள்ளாட்சியில் நல்லாட்சி புரிந்துவரும் தமிழக அரசிற்கும், மாமன்ற உறுப்பினர் திருமதி.சாந்தி ராமலிங்கத்திற்கு அனைத்து நகர் நலச் சங்கத்தின் நிர்வாகிகள் பாராட்டு தெரிவித்தனர்.

153வது வார்டுக்கு உட்பட்ட சாதி பெயரில் அமைந்துள்ள தெருக்களின் பெயர்கள் மாற்றப்பட்டு, செட்டித் தெருவை, வ.உ.சி. தெரு என்றும், யாதவாள் தெருவை, அழகுமுத்து தெரு என்றும், பாளையக்கார தெருவை, என்.எஸ்.சி. போஸ் தெரு என்றும், வன்னியர் தெருவை, ஈ.வே.இராமசாமி தெரு என்றும் பெயர் மாற்றம் செய்து தமிழக முதல்வரின் ஆணைக் கிணங்க, சாதி ஒழித்து சமத்துவம் தழைக்கும் வகையில் சிறப்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும் கூட்டத்தில் சில நகர் சங்க நிர்வாகிகள் தெரவித்த நகர் பிரச்சினைகளுக்கு, கூட்டத்தில் பங்கேற்ற சென்னை பெருநகர மாநகராட்சி அதிகாரிகள், மின்வாரியத்துறை அதிகாரிகள், சென்னை குடிநீர் மற்றும் வடிகால் துறை அதிகாரிகள், சமூக நலத் துறை அதிகாரிகள், நகர் நலச் சங்கத்தின் நிர்வாகிகள் தெரவித்த பிரச்சினைகளுக்கு உடனடி தீர்வு காண உறுதி அளித்தனர்.

இதில் வார்டு ஏரியா சபை உறுப்பினர்கள், நகர் நலச் சங்க நிர்வாகிகள், மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

இறுதியில் மாவட்டப் பிரதிநிதி ராமலிங்கம் நன்றி கூறினார்.

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி ஒன்றியம் கே.ஜி.கண்டிகை அரசு மேல்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவி கோமதி மாவட்ட அளவில் நடைபெற்ற 800 மீட்டர் மற்றும் 3000 மீட்டர் ஓட்டப்பந்தய தடகளப் போட்டியில் முதலிடம் பிடித்து மாநில அளவில் நடைபெறும் தடகளப் போட்டியில் பங்கேற்கும் வாய்ப்பினை பெற்ற மாணவிக்கு புதிய காலணி மற்றும் பயணச் செலவிற்காக ஊக்கத் தொகையினை திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் எம்.எல்.ஏ. வழங்கினார். உடன் ப.சிட்டிபாபு, எஸ்.மகாலிங்கம், டி.மோதிலால், ஆசிரியர்கள் நிர்வாகிகள் உள்ளனர்.

கழக தலைவர் முதல்வர் அவர்களின் அறிவுறுத்தலின்படி

"என் வாக்குச்சாவடி வெற்றிவாக்குச்சாவடி" குறித்து சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலாப்பூர், தியாகராயர் நகர் BLA-2, BDA ஆலோசனைக்கூட்டம்!

மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. அறிவிப்பு!

சென்னை தென்மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட மயிலாப்பூர், தியாகராயர் நகர் BLA-2, BDA கூட்டம் கீழ்க்கண்ட இடங்களில் நடைபெறுகிறது

மயிலாப்பூர் கிழக்கு மேற்கு

நாள்	நேரம்	இடம்
02.11.2025 ஞாயிற்றுக்கிழமை	காலை 11.00 மணி	எம்.ஜி.ஆர் ஜானகி கல்லூரி வளாகம்

தியாகராய நகர் கிழக்கு

வட்டம்	நாள்	நேரம்	இடம்
131–131அ	02.11.2025 ஞாயிற்றுக்கிழமை	காலை 9.00 மணி	சந்திர சேகர் மினி ஹால், தம்மையா ரோடு மேற்கு மாம்பலம், சென்னை
135–135அ		காலை 10.00 மணி	
134–134அ		மாலை 4.00 மணி	
141–141அ		மாலை 5.00 மணி	

தியாகராய நகர் மேற்கு

வட்டம்	நாள்	நேரம்	இடம்
130–130அ	03.11.2025 திங்கட்கிழமை	மாலை 5.00 மணி	STD மஹால் துரைசாமி சாலை, வடபழனி, சென்னை
132–132அ		மாலை 6.00 மணி	
133–133அ		மாலை 7.00 மணி	

இக்கூட்டத்தில் தொகுதிக்குட்ப்பட்ட மாநில, மாவட்ட நிர்வாகிகள், தொகுதிப்பார்வையாளர்கள், பகுதிச்செயலாளர்கள், வட்டச்செயலாளர்கள், பாக ஒருங்கிணைப்பாளர்கள், BLA2,BDA, பகுதி இளைஞர் அணி அமைப்பாளர்கள், பகுதி மகளிரணி அமைப்பாளர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மயிலை த.வேலு எம்.எல்.ஏ.

செயலாளர், சென்னை தென்மேற்கு மாவட்ட தி.மு.க.